# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண்.208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை- 600 106
தொலைபேசி எண் : 2363 5010, 2363 5011 நிகரி : 2363 8282, 2363 8283
மின்னஞ்சல் – tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in


## செய்தி வெளியீடு


செய்தி வெளியீடு எண் 20/2019 நாள் 13.12.2019


### சாதாரண உள்ளாட்சித் தேர்தல்–2019

தமிழகத்தில் உள்ளாட்சி தேர்தல்கள் நடைபெறுவதையொட்டி, தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் முனைவர் இரா.பழனிசாமி இ.ஆ.ப.,(ஓ) அவர்கள் தலைமையில் இன்று (13.12.2019) தேர்தல் பார்வையாளர்களுக்கான கூட்டம் நடைபெற்றது.

இந்த தேர்தல் பார்வையாளர்கள் கூட்டத்தில் மாநில தேர்தல் ஆணைய செயலாளர் முனைவர் இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., மற்றும் இந்திய ஆட்சிப்பணி அலுவலர்கள் கலந்து கொண்டார்கள். இக்கூட்டத்தில் தலைமையேற்ற மாநில தேர்தல் ஆணையர் அவர்கள் பேசும்போது, தேர்தல் நடைபெறும் பொழுது தேர்தல் பார்வையாளர்கள் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்து விரிவாக எடுத்துக் கூறப்பட்டது.

அனைத்து வாக்குசாவடி மையங்களிலும் வாக்காளர்கள் எளிதில் வந்து வாக்களிக்கும் வகையில் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் உள்ளனவா என்பதை ஆய்வு செய்ய வேண்டுமென தெரிவிக்கப்பட்டது.

மேலும், வேட்பு மனுக்கள் முறையாகப் பெறப்படுகின்றனவா என்பதை ஆய்வு செய்யுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

மாநில தேர்தல் அலுவலர், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் மற்றும் தேர்தல் நடத்தும் அலுவலர்களின் கூட்டம் நடத்தி, நடைபெறவுள்ள ஊரக உள்ளாட்சி தேர்தல் முறையாக நடைபெறுவதை உறுதிசெய்ய வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

வேட்பு மனுக்கள் பரிசீலனையின்போது எவ்விதமான விருப்பு வெறுப்புகளுக்கு இடம் கொடுக்காமல் நடுநிலையோடு வேட்பு மனு பரிசீலனை நடைபெறுவதை உறுதி செய்யுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

மாவட்டத்தில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் முழுமையாகவும், முறையாகவும் கடைபிடிக்கப்படுவதை கண்காணிக்குமாறு தெரிவிக்கப்பட்டது.

வாக்குப்பதிவுக்கு தேவையான அனைத்து பொருட்களும், அனைத்து வாக்கு சாவடி மையங்களுக்கும் முழுமையாக சென்றடைவதை உறுதி செய்ய வேண்டும்.

மாவட்டத்தில் பதட்டமான வாக்குச் சாவடி மையங்களுக்கு தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதை ஆய்வு செய்து, வாக்காளர்கள் எந்தவிதமான அச்சமுமின்றி வாக்களிப்பதற்கு தகுந்த சூழ்நிலைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதை உறுதி செய்ய வேண்டும்.

வாக்குச்சாவடி மையங்களில் எந்தவிதமான அசம்பாவிதங்களும் நடைபெறாமல் சுதந்திரமாக வெளிப்படை தன்மையுடன் தேர்தல் நடைபெறுவதை உறுதி செய்யுமாறு தேர்தல் பார்வையாளர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

வாக்குப்பதிவு முடிவுற்றபின் வாக்குப்பெட்டிகள் வாக்கு எண்ணும் மையங்களுக்கு தக்க பாதுகாப்போடு கொண்டு செல்வதற்கு எடுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளை உறுதி செய்ய வேண்டும்.

வாக்கு எண்ணும் மையங்கள் முறையாக அமைக்கப்பட்டுள்ளதையும், அதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளையும் உறுதி செய்ய வேண்டும்.

நடைபெறவுள்ள ஊரக உள்ளாட்சி தேர்தல்கள் வெளிப்படை தன்மையுடனும், சுதந்திரமாகவும் நடத்துவதற்கு மாநில தேர்தல் ஆணையத்திற்கு அனைத்து தேர்தல் பார்வையாளர்களும் ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் அவர்கள் கேட்டுக்கொண்டார்கள்.

(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)

13/12/19

மக்கள் தொடர்பு அலுவலர்